தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 123 | 4 Pages | 1.12.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 123 | 4 பக்கங்கள் | 1.12.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**

**விளக்கம்:**
நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கிஉணரும்புல்லறிவுஉடையவராகஇருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.

## நைஜர் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து; ஏராளமான பயணிகள் பலி



நைஜர், டிச.1

நைஜீரியாவின் வடக்கு பகுதியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நைஜர் ஆற்றில் சென்றுகொண்டிருந்த படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. கோகி மாநிலத்தில் இருந்து அண்டை மாநிலமான நைஜர் நோக்கி சென்ற அந்த படகில் 200க்கும் மேற்பட்டோர்பயணித்தனர். படகு கவிழ்ந்ததும் அதில் இருந்த பயணிகள் ஆற்றில்விழுந்துதத்தளித்தனர். நீச்சல்தெரிந்தவர்கள்நீந்திகரைசேர்ந்தனர்.

உள்ளூரைச்சேர்ந்த டைவிங் குழுவினர்விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அவசரகால மேலாண்மை நிறுவன மீட்புக் குழுவினரும் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியை முடுக்கி விட்டனர்.

மீட்பு பணியின்போது 8 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். சுமார் 100 பேரின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர். அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே, இந்த விபத்தில் ஏராளமானோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

படகு மூழ்கியதற்கான காரணம் குறித்து அதிகாரிகள் இதுவரை உறுதி செய்யவில்லை. எனினும், அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றதால் படகு கவிழ்ந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

## விண்வெளி நிலையத்தில் தேங்க்ஸ் கிவ்விங் டே கொண்டாடிய சுனிதா வில்லியம்ஸ் வீடியோ



வாஷிங்டன், டிச.1

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நான்காவது வியாழன் அன்று நன்றி செலுத்துதல் நாள் (தேங்க்ஸ் கிவ்விங் டே) கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு நேற்று (28.11.2024) தேங்க்ஸ்கிவ்விங் டே கொண்டாடப்பட்டது.

நாசா விஞ்ஞானி சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபடி தேங்க்ஸ் கிவ்விங் டே கொண்டாடி உள்ளார். அவர், வீடியோ வாயிலாகப் பூமியில் உள்ளோருக்கு தேங்க்ஸ் கிவ்விங் வாழ்த்து தெரிவித்தார். பூமியில் உள்ள நாசா விஞ்ஞானிகளும் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். அந்த வீடியோவை நாசா வெளியிட்டுள்ளது. தேங்க்ஸ் கிவ்விங் விருந்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் குழுவினருக்கு மசித்த உருளைக்கிழங்கு, ஆப்பிள், வான்கோழி கறி, கிரான்பெர்ரி, பச்சைபீன்ஸ், ஆப்பிள் கோப்லர், காளான்கள் உணவாக வழங்கப்பட்டுள்ளன.


அமெரிக்காவில் முதன் முதலில் நன்றி செலுத்தும் நாள் 1621ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. யாத்ரீகர்களும் பூர்வீக அமெரிக்கர்களும் அறுவடையை கொண்டாடுவதற்காக ஒன்றுகூடினர். இந்நிகழ்வு குடியேறியவர்களுக்கு நிலத்தை பயிரிடவும், கடுமையான குளிர்காலங்களில் இருந்து தப்பிக்கவும் உதவிய பூர்வீகஅமெரிக்கர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அமைந்தது.

அதாவது, முந்தைய ஆண்டு அமெரிக்காவிற்கு வந்த யாத்ரீகர்கள், கடுமையான குளிர்காலம் மற்றும் வளங்கள் இல்லாததால் உயிர் பிழைக்க போராடினர். அப்போது, பூர்வீக அமெரிக்கர்கள் அவர்களுக்கு உதவி செய்துள்ளனர். அவர்களின் உதவியுடன், பயிர்களை எவ்வாறு பயிரிடுவது மற்றும் தங்களை தக்க வைத்துக் கொள்வது எப்படி என்பதை அவர்கள் கற்றுக்கொண்டனர்.

இதனால் பூர்வீக அமெரிக்கர்களுக்கு தங்கள் நன்றியுணர்வைக் காட்ட, யாத்ரீகர்கள் மூன்று நாள் விருந்து வைத்தனர். அதில் வான்கோழி, சோளம், பூசணி மற்றும் பிற உணவுகள் அடங்கும். அதன்பின்னர் பாரம்பரியமாக இந்தஅறுவடைதிருநாள்,நன்றிசெலுத்தும்நாளாககொண்டாடப்படுகிறது. இந்தஅறுவடைத்திருவிழாவானதுதேசியவிடுமுறையாகவும்உருவானது.

அமெரிக்கா மட்டுமின்றி ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, ஜெர்மனி மற்றும் சில நாடுகளிலும் தேங்க்ஸ் கிவ்விங் டே கொண்டாடப்படுகிறது.

## மலேசியாவில் மோசமான வெள்ளம்; 3 பேர் பலி



கோலாலம்பூர், டிச.1

மலேசியாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல்வேறு இடங்களில் மோசமான வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தால் 3 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளதாக மலேசியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

7 மாநிலங்களில் உள்ள 25,000க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 84,547 பேர் 488 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய பேரிடர் மையம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் எல்லையை ஒட்டிய வடகிழக்கு மாநிலமான கெலந்தனில் 56,029பேர்தங்கள்வீடுகளில்இருந்துவெளியேற்றப்பட்டதைதொடர்ந்து, அண்டை நாடான டெரெங்கானுவில் 21,264 பேர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

# முதல்வர் தலைமையில் வேளாண்மை, மீன்வளம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த ஆய்வுக் கூட்டம்






சென்னை, டிச.1

சென்னை தலைமை செயலகத்தில்நடைபெற்றஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மைஉழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் பணிகள் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2021,22 முதல் 202425 ஆம் ஆண்டுகள் வரை வேளாண்மைஉழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து முதல்அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்கும் பணிகள், ஈரோடு மாவட்டத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் ஏற்றுமதி மையம் தரம் உயர்த்தும் பணிகள், தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் பணிகள், தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் 65 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகளை வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் பணிகள், தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கும் பணிகள், தண்டையார்பேட்டை – காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சக பணியாளர்களுக்கான குடியிருப்புகளை இடித்துவிட்டு 34.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச்சிலையுடன்கூடிய மணி மண்டபம் அமைக்கும் பணி, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கும் பணி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும்புனரமைப்புபணிகள்போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதல்அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் சென்னைதுறைமுகப் பொறுப்புக்கழகத்துடன்இணைந்து, சென்னை, காசிமேட்டில் உள்ள மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணிகள், கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி. புதுப்பேட்டை ஆகிய கடலோர கிராமங்களில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்பு சுவர்களுடன்கூடிய புதிய மீன்இறங்குதளங்கள் அமைக்கும் பணிகள், சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் 50 கோடி ரூபாய் செலவில் நவீன மீன்சந்தைகள் அமைக்கும் பணிகள், அம்பத்தூர் பால் பண்ணையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பால் பொருட்கள், சிப்பம் கட்டும் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களுக்கான ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம், நுண்ணுயிரியல் பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் அமைக்கும் பணிகள், நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பாலைபதப்படுத்தும்பால்பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்கும் பணிகள் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதல்அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதல்அமைச்சர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துறை செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெஞ்சல் புயல்: சென்னையில் கனமழை...ரெயில், விமான சேவை பாதிப்பு

சென்னை, டிச.1

வங்கக்கடலில் உருவான பெஞ்சல் புயல் மாமல்லபுரம் காரைக்கால் இடையே கரையை கடக்கிறது. புயல் கரையை கடக்கும்போது அதி கன மழை பெய்யும் என்று வானிலை மையம் எச்சரித்து இருக்கிறது.

விமான ஓடுபாதையில் தேங்கிய மழையால் சென்னை விமான நிலையத்தில் விமானங்களை இயக்க முடியாத சூழல் நிலவுகிறது. அதேபோல, மோசமான வானிலை காரணமாக சென்னைக்கு வர வேண்டிய 19 விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டு உள்ளன. குறிப்பாக சென்னையில் 55 விமான சேவை ரத்துசெய்யப்பட்டு உள்ளது.

முன்னதாக விமானங்களின் சேவை இரவு 7.30 மணி வரை ரத்துசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், பயணிகளின் பாதுகாப்பு கருதி சென்னை விமான நிலையம் நாளை அதிகாலை 4 மணி வரை மூடப்படுவதாக சென்னை விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. விமான நிலையம் மூடப்படுவதால் உள்ளூர், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு செல்வதற்காக சென்னைவிமானநிலையம்வந்துள்ள பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர்.

சென்னையில் பெய்த தொடர்மழை காரணமாக கொருக்குப்பேட்டை ரெயில் நிலையத்தில் தண்டவாளம் முழுவதும் மழை நீர் சூழ்ந்துள்ளது.

புயல் எதிரொலியாக சென்னை அருகே கோவளத்தில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. இதனால், கோவளம் பகுதியில் கடல் கொந்தளிப்புடன் உள்ளது. சென்னையில் நள்ளிரவு முதல் மதியம் வரை விடாமல் மழை கொட்டித்தீர்த்தது. மதியம் 2 மணியில் இருந்து 4 மணி வரை மழை குறைந்து காணப்பட்டது.

இந்த நிலையில், சென்னை உட்பட 13 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்திற்கு அதி கனமழை பெய்யுமென வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 3 மணி நேரத்திற்கு அதி கனமழைக்கு வாய்புள்ள மாவட்டங்கள்; சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 3 மணி நேரத்திற்கு மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னைஅடுத்த ஆவடியில் மின்சார கம்பி மீது தென்னை மரம் விழுந்து மின்சார தடை ஏற்பட்டு உள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை. அந்த பகுதியில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டு உள்ளது.

சென்னையில் இருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் புயல் உள்ளது. 10 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. புயல் காரைக்கால் மாமல்லபுரம் இடையே புதுவைக்கு அருகில் இன்று மாலை புயல் கரையை கடக்கிறது. கரைக்கு அருகே வரும்போது புயலின் நகர்வு வேகம் குறையும். புயல் முழுமையாக கரையை கடக்க சில மணி நேரங்கள் ஆகலாம். மயிலாடுதுறை முதல் திருவள்ளூர் வரை 90 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் இன்று அதி கனமழை பெய்யக்கூடும். ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும்.' என்றார்.

தாம்பரம்: குரோம்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவமனை மற்றும் நெஞ்சக மருத்துவமனையில் மழைநீர் தேங்கியுள்ளதால் நோயாளிகள் அவதியடைந்துள்ளனர். மருத்துவமனைக்கு மழைநீர் வருவதை தடுக்கும் வகையில் மணல்மூட்டைகளை அடுக்கி போலீசார் தடுத்து வருகின்றனர்.

கனமழை காரணமாக சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தை மழை நீர் சூழ்ந்துள்ளது.

தண்டவாளத்தில் மழை நீர் மின்சார ரெயில்கள் தற்காலிகமாக நிறுத்தம் சென்னை பல்லாவரத்தில் தண்டவாளத்தில் மழைநீர் தேங்கியதால் சென்னை கடற்கரையில் இருந்து தாம்பரம் நோக்கி சென்ற மின்சார ரெயில்கள் 2 மணி நேரம் வரை பல்லாவரத்திலேயே நிறுத்தப்பட்டு உள்ளன. மழைநீரை அகற்றும் பணியில் ரெயில்வே ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மரக்காணத்திற்கு அருகே பெஞ்சல் புயல் கரையை கடக்க வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முதலில் காரைக்கால் மாமல்லபுரம் இடையே பெஞ்சல் புயல் கரையை கடக்கும் என கூறப்பட்டது. பெஞ்சல் புயல் காரணமாக வடதமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. பெஞ்சல் புயல் கரையை கடக்கும் போது மணிக்கு 90 கி.மீ வேகத்தில் காற்று வீச வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

## புயல் எதிரொலி; கோவளத்தில் கடல் கொந்தளிப்பு; 60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசுகிறது



கோவளம், டிச.1

வங்கக்கடலில் நேற்று உருவான 'பெஞ்சல்' புயல் காரைக்காலுக்கும், மாமல்லபுரத்துக்கும் இடையே புதுச்சேரி அருகே இன்று மதியம் அல்லது இரவுக்குள் கரையை கடக்கும் எனவும், இதன் காரணமாக சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிக கனமழை வரை பெய்யக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பெஞ்சல் புயலை முன்னிட்டு, சென்னையில் பல்வேறு இடங்களில் கனமழை தொடர்ந்து பெய்து வருகிறது. சென்னை அருகே செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்ட கோவளத்தில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது பெஞ்சல் புயல் இன்று மாலை கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், பலத்த சூறைக் காற்றால் கோவளம் கடல் பகுதி கொந்தளிப்புடன் உள்ளது. காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால், உயரே வளர்ந்து நிற்கும் தென்னை, பனை உள்ளிட்ட மரங்கள் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அசைந்து, ஆடுகின்றன.

தினகனி



# சென்னை உள்பட 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை: மாநில பேரிடர் ஆணையம்

சென்னை, டிச.1

தமிழகத்தில் ஃபெங்கல் புயல் உருவாகியுள்ளது. இது இன்று பிற்பகலில் காரைக்கால் மற்றும் மாமல்லபுரம் இடையே கரையை கடக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஃபெங்கல் புயல் காரணமாக மணிக்கு 50 முதல் 90 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்றுடன் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.



நள்ளிரவு முழுவதும் சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மழை பெய்தது.

இந்நிலையில், தமிழகத்தில் சென்னை உள்பட 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவண்ணாமலை, திருவள்ளூர், வேலூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள நீர் நிலைகளில் சிறிய அளவிற்கு வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என மாநில பேரிடர் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

# செங்கல்பட்டு: 61 ஏரிகள் முழுவதும் நிரம்பின

செங்கல்பட்டு, டிச.1

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் 381 ஏரிகளும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 528 ஏரிகளும் உள்ளன. தொடர்ந்து பெய்த வரும் மழையினால் 61 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டி உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனுமன் தண்டலம், இளநகர் சித்தேரி ஆகிய 7 ஏரிகளும். செங்கல்பட்டு மாவட்டத்தில் நந்திவரம் கூடுவாஞ்சேரி ஏரி, திம்மாவரம் ஏரி, ஆத்தூர் ஏரி, வில்லிய ம்பாக்கம், அச்சரப்பாக்கம் ஏரி, பாக்கம் ஏரி, பிள்ளைபட்டி ஏரி, மாத்தூர் ஏரி, ஓரத்தூர் ஏரி, கடமலைபதூர் ஏரி , விளங்காடு பெரிய ஏரி, உண்ணாமலை பல்லேரித்தாங்கல், பருக்கள் தாங்கள், களவேரி, பள்ளிப்பேட்டை ஏரி, அட்டுப்பட்டி கோ ட்டை ஏரி,புஞ்சைஏரி,கோட்டை கரை மாம்பட்டு ஏரி, கயப்பாக்கம் கோட்டை ஏரி, சின்ன கயப்பாக்கம் ஏரி, கோட்டை கயப்பாக்கம் ஏரி, காட்டு கூடலூர் ஏரி உள்ளிட்ட 54 ஏரிகள் நிரம்பி இருக்கிறது.

# 9 ஆண்டுகளாக பயன்படாமல் மூடி கிடக்கும் நியாய விலைக்கடை




பொன்னேரி, டிச.1

பொன்னேரி நகராட்சிக்கு உட்பட்ட 19வார்டு பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். இப்பகுதியில் உள்ளவர்கள் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் சென்று பொன்னேரிதச்சூர் சாலையில் கவுரி தியேட்டர்மற்றும்பழைய டி.எஸ்.பி. அலுவலகம் அருகே உள்ள ரேசன்கடைகளில் பொருட்கள் வாங்கி வருகின்றனர். இதனால் வயதானவர்கள் நீண்ட தூரம் சென்று ரேசன் பொருட்கள் வாங்க வர சிரமம் அடைந்து வருகின்றனர்.

இப்பகுதி மக்களின் வசதிக்காக அருகே கும்மங்கலம் கால்நடை மருத்துவமனைக்கு பின்புறம் கடந்த 201516 ம் ஆண்டு ரூ. 7.41 லட்சம் மதிப்பில் புதிதாக ரேசன் கடை கட்டப்பட்டது. இந்த கடை திறக்கப்பட்ட ஓரிரு நாளிலேயே ரேசன் பொருட்கள் ஏற்றி வரும் வாகனங்கள் வருவதில் சிரமம் இருப்பதாக கூறி ரேசன் கடை மூடப்பட்டதாக தெரிகிறது. இதன் பின்னர் 19வது வார்டு பகுதி மக்கள் 2 கிலோ மீட்டர் தூரம் சென்று ரேசன் பொருட்களை வாங்கி வரும் நிலை நீடித்து வருகிறது.

கடந்த 9 ஆண்டுகளாக பயன்படாமல் மூடிகிடக்கும் ரேசன் கடையை திறந்தால் அப்பகுதி மக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்ற பொது மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் நீலமேகம் தலைமையில் ரேசன் கடையை திறக்க கோரி துணை வட்டாட்சியர் கனக வள்ளியிடம் கடந்த சில நாட்களுக்கு முன்பு மனு அளித்தனர். ஆனால் இதுவரைரேசன்கடையை திறக்க அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அப்பகுதி மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

இதுகுறித்து அப்பகுதி பெண்கள் கூறும்போது, கும்மங்கலம் கால்நடை மருத்துவமனைக்கு பின்புறம் புதிதாக கட்டப்பட்ட ரேசன் கடை எந்த பயனும் இல்லாமல் மூடி கிடக்கிறது.

இதனால் நாங்கள் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் சென்று ரேசன் பொருட்கள் வாங்கி வருகிறோம். இதனால் வீடுகளில் தனியாக வசிக்கும் வயதானவர்கள் கடும் சிரமம் அடைந்து வருகிறார்கள். அவர்கள் ரேசன் பொருட்களை கொண்டு வர அடுத்தவர்களைநம்பி இருக்கும் நிலை உள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் கடந்த 9 ஆண்டுகளாக மூடி கிடக்கும் ரேசன் கடையை பயன்பாட்டுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகராட்சியில் தொழில் உரிமங்களை புதுப்பிக்காவிட்டால் நடவடிக்கை: நகராட்சி உத்தரவு

வண்டலூர், டிச.1

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் ராணிகூறியிருப்பதாவது:

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள், வணிகர்கள், சில்லறை வியாபாரிகள் முறையாக கட்டணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டும். அவ்வாறு புதுப்பிக்காதவர்கள் மற்றும் புதிய தொழில் உரிமங்களை பெறாதவர்கள் நகராட்சி அலுவலகத்தில் சுகாதார அலுவலர் நாகராஜன் மற்றும் சுகாதார ஆய்வாளர் காளிதாஸ் ஆகியோரிடம்




விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை வழங்கி, அதற்குரிய கட்டணம் செலுத்தி உரிமங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தவறும் பட்சத்தில் நகராட்சி பணியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு, அவர்களுக்கு இரண்டு முறை நினைவூட்டல் கடிதம் நேரில் வழங்கப்படும் அதிலும் அவர்கள் தொழில் உரிமங்களை பெறாமல் அல்லது புதுப்பிக்காமல் வணிகம் செய்து வந்தால், கடையை பூட்டி சீல் வைத்து , நீதிமன்ற நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படும்.

நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 2,100 க்கும் மேற்பட்ட சிறு, தொழில் நிறுவனங்கள் மற்றும் கடைகள் உள்ளன. அதில் தற்போது வரை 500 பேர் மட்டும் தான் தொழில் உரிமத்தை புதுப்பித்து உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சாலை விரிவாக்கப் பணிக்கு 28 வீடுகள் இடிப்பு

பொன்னேரி, டிச.1

பொன்னேரியை அடுத்த புதுவாயல்பழவேற்காடு இணைப்பு சாலை 4 வழி சாலையாக விரிவாக்கம் செய்யப்படுகிறது. ரூ.45 கோடி மதிப்பில் 4. 2 கிலோமீட்டர்தூரம் இந்த பணி நடக்கிறது.

சாலை விரிவாக்கப்பணி கடந்த 2022ம் ஆண்டு தொடங்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களால் சாலை விரிவாக்கம் மெதுவாக நடந்து வருகிறது.



இந்த நிலையில் சாலை விரிவாக்கத்தால் 52 வீடுகள், ஒரு கோவில் பாதிக்கப்படுவதாக நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரிய காவனம், சின்ன காவனம் பகுதி பொது மக்கள்பலகட்டபோராட்டங்கள் நடத்தினர்.

இதற்கிடையேநெடுஞ்சாலைத்துறையினர் சாலை விரிவாக்கப்பணிக்கு எடுக்கப்படும் வீடுகளுக்கு ஏற்கனவே நோட்டீஸ் மற்றும் இழப்பீடு வழங்கி இருந்தனர். இதைத்தொடர்ந்து சின்னக்காவனம் பகுதியில் உள்ள 28 வீடுகள் பொன்னேரி உதவி கோட்ட பொறியாளர் பாலச்சந்தர் இளநிலை பொறியாளர் பரந்தாமன் முன்னிலையில் ஜே.சி.பி.எந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது. மீதமுள்ள 24 வீடுகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டு விரைந்து வீடுகளை இடித்து அகற்றும் பணி நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அரசுக்கு சொந்தமான இடத்தில் அனுமதியின்றி கோவில் கட்டப்படுவதை எதிர்த்து ஐகோர்ட்டில் வழக்கு

மதுரை, டிச.1

திருச்சியை சேர்ந்த முருகேசன் ஐகோர்ட்டு மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:



திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் அரசுக்கு சொந்தமான இடத்தில் ஈரோட்டை சேர்ந்த தனியார் ஒப்பந்ததாரர் ஒருவரால் மிகப்பெரிய ஆஞ்சநேயர் கோவில் கட்டப்பட்டு வருகிறது. கோவில் கட்டப்பட்டு வரும் இடம் அரசுக்கு சொந்தமான இடம். மேலும் கட்டுமான பொருட்கள் அனைத்தையும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு உள்ளே வைத்து உள்ளனர். இங்கு கட்டுமான பணியில் ஈடுபடும் ஊழியர்களும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலேயே தங்கி உள்ளனர்.

இவ்வாறு அரசுக்கு சொந்தமான நிலத்தில் கோவில் கட்டுவதற்கும், பணியாளர்கள் அங்கே தங்குவதற்கும் எந்த அனுமதியும் அரசு வழங்கவில்லை. இதுகுறித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் முறையிட்டபோது அவர் உரிய நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டார். மேலும் தனியார் ஒப்பந்ததாரருடன் இணைந்து செயல்படுகிறார்.

அரசுக்கு சொந்தமான நிலத்தில் எந்தவித வகை மாற்றமும் செய்யாமல் சட்டவிரோதமாக தனியார் ஒப்பந்ததாரருடன் மாவட்ட வருவாய் அதிகாரி இணைந்து இது போன்ற கட்டுமானங்களை கட்டி வருகிறார். இதுகுறித்து உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே அரசு நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்டு வரும் கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந்த மனுவில் அவர் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், நீதிபதி மரிய கிளாட் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் உள்ளேயே அரசு நிலத்தில் உரிய அனுமதி இல்லாமல் ஆஞ்சநேயர் கோவில் கட்டப்படுவதற்கான புகைப்படங்களையும் ஆவணங்களையும் தாக்கல் செய்தார்.

இதனை பதிவு செய்த நீதிபதிகள் மனுதாரர் புகார் குறித்து உள்துறை செயலர் மற்றும் திருச்சி மாவட்ட கலெக்டர் பரிசீலனை செய்து உரிய முடிவெடுக்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# 25 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை பிரஸ் கிளப்க்கு தேர்தல்: தேதி அறிவிப்பு

சென்னை, டிச.1

52 ஆண்டுகள் பழமை வாய்ந்த சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு (பிரஸ் கிளப்) பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படவில்லை. இதனால் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கிளப்பின் பொதுக்குழுவால் அமைக்கப்பட்ட 12 பேர் கொண்ட சிறப்பு வழிகாட்டுதல் குழுவின் கோரிக்கையின் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி பாரதிதாசன் தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், 25 ஆண்டுகளுக்கு பிறகு அடுத்த மாதம் தலைவர், இரண்டு துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளர், பொருளாளர், இணைச் செயலாளர் மற்றும் ஐந்து கமிட்டி உறுப்பினர்கள் பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்படுவதாக பாரதிதாசன் அறிவித்துள்ளார்.

சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தின் முதன்மை உறுப்பினர்கள் மட்டுமே தேர்தலில் வாக்களித்து போட்டியிட தகுதியுடையவர்கள். பதவிகளுக்கான வேட்புமனுக்களை நாளை முதல் டிசம்பர் 7ஆம் தேதி வரை ( ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) பிற்பகல் 2 மணி முதல் மாலை




5 மணி வரை தாக்கல் செய்யலாம். வேட்புமனு மீதான பரிசீலனை 9ந்தேதி பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

10ந்தேதி வேட்புமனுவை திரும்பப்பெறலாம். இறுதி வேட்பாளர் பட்டியல் 10ந்தேதி மாலை 6 மணிக்கு வெளியிடப்படும். 15ந்தேதி வாக்குப்பதிவு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். அதன்பிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அன்று மாலை 6 மணிக்கு முடிவுகள் அறிவிக்கப்படும்.

கடைசியாக 1999ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு பிறகே இந்த ஆண்டு நடைபெறுகிறது குறிப்பிடத்தக்கது.

# வாலிபரை துண்டு, துண்டாக வெட்டி கல்குவாரியில் பிணம் வீச்சு; முக்கிய குற்றவாளி கைது



வானூர், டிச.1

விழுப்புரம் மாவட்டம் வானூர் அடுத்த திருவக்கரை பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான கல்குவாரி கடந்த 23ம் தேதி தலை, கை, கால்கள் வெட்டப்பட்ட நிலையில், உடல் மட்டும் கண்டெடுக்கப்பட்டது.

இது குறித்து வானூர் போலீசார் வழக்கு பதிவு செய்து கொலை செய்யப்பட்ட நபரின் மார்பில் கஸ்தூரி என்று பச்சை குத்தப்பட்டிருந்ததை வைத்தும், கொலையாளிகள் குறித்து விசாரித்து வந்தனர். தலை வெட்டப்பட்டதால் 3 நாட்கள் கொலை செய்யப்பட்டவரின் விவரத்தை கண்டுபிடிக்க முடியாமல் போலீசார் திணறினர்.

இதற்கிடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு, தனது மகனை காணவில்லை என விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூரை சேர்ந்த பெண் ஒருவர் புகார்கூறி இருந்தது தெரிய வந்தது. அதன் பேரில் தனிப்படை போலீசார் அப்பகுதிக்கு சென்று விசாரித்தனர். அதில், கிளியனூர் போலீஸ் நிலையத்திற்குட்பட்ட கொந்தமூரில் பெண்ணை கற்பழித்த வழக்கில், சிறையில் இருந்து வெளியே வந்த, திருவணெ்ணைநல்லூர் சரவணப்பாக்கத்தை சேர்ந்த கொத்தனார் ராஜதுரை( 32)நீதிமன்றபிடிவாரண்டு பேரில், கடந்த சில நாட்களுக்கு முன்பு கிளியனூர் போலீஸ் நிலையத்தில் கையெழுத்து போட்டதும், அதன் பிறகு அவர் காணாமல் போனதும் தெரிய வந்தது.

இதையடுத்து, சென்னையில் இருந்த ராஜதுரையின் மனைவி முனியம்மாளை வரவழைத்து விசாரித்தனர். அதில் தனது கணவர், மார்பில்கஸ்தூரிஎன்றபெயரை பச்சை குத்தியிருந்திருந்தார் என்பதை உறுதி செய்தனர். அதன்பிறகு ராஜதுரையின் மொபைல் போனிற்கு வந்த எண்களை வைத்து, போலீசார் திருவெண்ணைநல்லூர் தாலுகாவை சேர்ந்த சிலரை பிடித்து விசாரித்தனர்.

அதில், திருவணெ்ணைநல்லூர் அடுத்த கொத்தனூர் பகுதியை சேர்ந்த சிவா(22) சரவணப்பாக்கத்தை சேர்ந்த உதயா( 25) கொத்தனூரை சேர்ந்த மோகன்ராஜ் மற்றும் தலைமறைவாக உள்ள சிலர் சேர்ந்து ராஜதுரையை அடித்து கொலை செய்ததும் தெரிய வந்தது. நீண்ட நாட்களாக சிவா, உதயா, மோகன்ராஜ், கொலை செய்யப்பட்ட ராஜதுரை உள்ளிட்டோர் நண்பராக சுற்றி வந்துள்ளனர்.

கற்பழிப்பு வழக்கில் ஜாமீனில் வெளியே வந்த ராஜதுரை, கடந்த செப்டம்பர் மாதம் 26ந் தேதி, உறவினரின் துக்க நிகழ்ச்சிக்கு சொந்த ஊருக்கு வந்துள்ளார். அப்போது, சிவா, உதயா, மோகன்ராஜ் உள்ளிட்டோருக்கும், ராஜதுரைக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அதில் ஆத்திரமடைந்த ராஜதுரை, அனைவரின் முன்னிலையில் அவர்களை தாக்கியுள்ளார். அதில் இருந்து அவர்கள், ராஜதுரை மீது ஆத்திரத்தில் இருந்து வந்துள்ளனர்.

கடந்த 12ந் தேதி சிவா, உதயா உள்ளிட்ட சிலர், தடுத்தாட்கொண்டோர் கிராம ஏரிக்கரைக்கு, ராஜதுரையை சமரசம் பேசுவதற்கு வரவழைத்துள்ளனர். அங்கு அனைவரும் மது அருந்திக்கொண்டிருக்கும் போது, அவரை தடியால் தாக்கி விட்டு அங்கிருந்து தப்பியோடியதும், மறுநாள் வந்து பார்த்த போது அவர் இறந்திருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து, அவரது உடலை அதே பகுதியில் கரும்பு தோட்டத்தில் பதுக்கி வைத்து, விட்டு, புதுச்சேரிக்கு சென்றுள்ளனர்.

அங்கு அவர்களின் நண்பரான புதுச்சேரி மாநிலம் கலிதீர்த்தாள் குப்பம் பகுதியை சேர்ந்த கார்த்திக்( 22) உதவியோடு, அழுகிய நிலையில், உடலை தலை, கை, கால்களை தனித்தனியாக வெட்டி, இரு பாலித்தீன் பையில் கட்டி வாகனத்தில் சுமார் 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவக்கரை கல்குவாரியில் வீசி விட்டு சென்றாக அவர்கள் போலீசில் வாக்குமூலம் அளித்துள்ளனர். அதன் பேரில் சிவா, உதயா, மோகன்ராஜ், புதுச்சேரியை சேர்ந்த கார்த்திக் ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

மேலும், இந்த கொலை வழக்கில் தலைமறைவாக இருக்கும் சிலரை தேடி வந்தனர். இந்த நிலையில் இவர்களுக்கு உதவியாக இருந்த திண்டிவனம் கிடங்கல்1 பகுதியை சேர்ந்த கறிக்கடைக்காரர் ரெமோஎன்கின்றஅபியை போலீசார் கைது செய்தனர். இவரிடம் விசாரணை செய்த போது ராஜதுரை உடலை கார் மூலமாக புதுவைக்கு எடுத்து வர வந்து உதவி செய்ததும் மேலும் அவர்களுக்கு புதுவையில் உள்ள ஒரு தனியார் விடுதியில் கொலையாளிகளை தங்க வைக்க உதவி செய்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது. அபி புதுவையில் இருந்து திண்டிவனத்திற்கு குடிபெயர்ந்து உள்ளார். இதனால் புதுவையில் உள்ள நண்பர்கள் மூலமாக மற்றவர்களுக்கு அறிமுகம் ஆகி உள்ளதும் போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அபி திண்டிவனத்தில் 12 வகுப்பு மாணவனை சரமாரியாக தாக்கிய வழக்கில் கைது செய்யப்பட்டவர் என்பதும், அதேபோல நகராட்சி தேர்தலில் அ.தி.மு.க. பெண் கவுன்சிலர் வேட்பாளரை தாக்கிய வழக்கும் இவர் மீது உள்ளது குறிப்பிடத்தக்கது.

கொத்தனார் ராஜதுரை வழக்கில் முக்கிய குற்றவாளியாக விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே உள்ள கூகநத்தத்தை சேர்ந்த மாரி செயல்பட்டது தெரிய வந்தது. அவரை இன்று காலை போலீசார் கைது செய்தனர். இவர் இக்கொலையில் கூலிப்படையாக செயல்பட்டது தெரிய வந்தது. கைதான மாரி மீது 10க்கும் மேற்பட்ட கொலை வழக்கு உள்ளது போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது மட்டுமின்றி இக்கொலை தொடர்பாக சரவணம்பாக்கத்தை சேர்ந்த ஜபாலூதீன், ராஜகுமரன் ஆகியோரும் கைது செய்யப்பட்டு உள்ளது.

கொலை செய்யப்பட்ட ராஜதுரையின் தலை, கை, கால்களை கல்குவாரியில் தேடும் பணியில் போலீசார் மற்றும் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர். ஆனால் கல்குவாரி சுமார் 150 அடி ஆழத்தில் உள்ளதால் உடல் பாகங்களை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

# திருவல்லிக்கேணி காமகலா காமேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான ரூ.7.5கோடி நிலம் மீட்பு




சென்னை, டிச.1

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் சென்னை, திருவல்லிக்கேணி காமகலா காமேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான ரூ.7.5 கோடி மதிப்பிலான காலிமனை மீட்கப்பட்டு கோவில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

சென்னை, திருவல்லிக்கேணி, ராஜா அனுமந்த தெருவில் 5305 சதுரடிபரப்பளவுகொண்ட காலிமனையானது. காமகலா காமேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமானது என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, சென்னை மண்டலம் இணை ஆணையரின் அறிவுரைகளின் படி, உதவி ஆணையர் கி.பாரதிராஜா முன்னிலையில், காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் காலி மனை மீட்கப்பட்டு, கோவில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

மயிலாப்பூர் சரக ஆய்வர் மணி, சிறப்பு பணி செயல் அலுவலர்கள் குமரேசன், தேன்மொழி, ரமேஷ், நித்யானந்தம், கோபி மற்றும் கோவில் செயல் அலுவலர் கங்கா தேவி ஆகியோர் இந்த மீட்புப் பணியின் போது உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் நல வாரியத்தில் 3,300 பேர் உறுப்பினராக சேர்ப்பு அமைச்சர் தகவல்



சென்னை, டிச.1

செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெளியிட்டுள்ளஅறிக்கை வருமாறு:

பத்திரிகையாளர்களின் நலனைக் காப்பதில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றநாள்முதல்முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 'பத்திரிகையாளர் நலவாரியம்' உருவாக்கப்பட்டது. இந்த நலவாரியத்தில் 3300 பேர் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 2431 செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 446 செய்தியாளர்களுக்கு சுகாதார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பத்திரிகையாளர் நலவாரியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்தியாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# தமிழகம் முழுவதும் இன்று ஆர்.எஸ்.எஸ்.சின் `கூடுவோம் கூட்டுவோம்' நிகழ்ச்சி

சென்னை, டிச.1

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் துணை அமைப்புகளாக சேவாபாரதி, ஏ.பி.வி.பி, தர்மரக்ஷண சமிதி, விசுவ இந்துபரிசத் என 200 அமைப்புகள் உள்ளன.

இந்த அமைப்புகளில் இருப்பவர்கள் அனைவரும் ஒன்று கூடுவது மற்றும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களை கூட்டி வரும் நிகழ்ச்சி 'கூடுவோம், கூட்டுவோம்' என்ற தலைப்பில் நாடு முழுவதும் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் நிகழ்ச்சி இன்று(1ந்தேதி) நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடக்கிறது.

தமிழ்நாட்டிலும் வார்டுகள் அளவில் நடத்துகிறார்கள். அந்த வார்டுகளில் இருக்கும் எந்தெந்த அமைப்புகளை சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு கலந்து கொள்ளும் இந்த கூட்டத்தில் 5 செயல்கள் பற்றி பேசுகிறார்கள். போதை ஒழிப்பு ஒரு தனி மனிதனாக என்ன செய்ய முடியும் என்ற எண்ணத்தை கைவிட்டுதானும் தன் குடும்பத்தை சேர்ந்தவர்களும் போதை பழக்கத்துக்கு ஆளாகாமல் பார்த்து கொள்ள வேண்டும். குடும்பங்களில் ஒற்றுமையை உருவாக்குதல் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது வீட்டில் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது, பேசுவது போன்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

சமூக நல்லிணக்கம் நமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சாதி, மொழி, அந்தஸ்து என்ற பேதமில்லாமல் அனைவருடனும் பழகும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

சுற்றுசூழல் பாதுகாப்பு வீடுகளில் தண்ணீரின் சிக்கனம், வீட்டையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக பராமரித்தல், பிளாஸ்டிக் கை தவிர்த்து துணி பைகளை பயன்படுத்த பழகி கொள்தல்.

சுதேசி வாழ்வியல்வீட்டிலும், முடிந்த இடங்களிலும் தாய்மொழியில் பேசும் பழக்கத்தை வளர்த்தல், பாரம்பரிய உடைகள் அணிவது, உள்ளூர் தயாரிப்பு பொருட்கள் வாங்குதல் ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.

குடிமகனின் கடமைகளாக சட்டத்தை மதித்து நடப்பது. உதாரணமாக ஹெல்மெட் அணிய வேண்டும் என்பது அரசின் சட்டம். அதை கடைபிடிக்க வேண்டும்.

இப்படி எல்லாவிதமான மாற்றங்களையும் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பங்களில் கடைபிடிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறார்கள்.

காலை 10 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளில் தலைவர்கள் முதல் முக்கிய நிர்வாகிகள் வரை அனைவரும் தங்கள் பகுதியில் நடக்கும் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

# நெல்லை, தூத்துக்குடியில் மீனவர்கள் 4வது நாளாக கடலுக்கு செல்லவில்லை



தூத்துக்குடி, டிச.1

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காரைக்கால் மாமல்லபுரம் இடையே நாளை கரையை கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திற்கு காற்று வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாககடந்த 3 நாட்களாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

இன்று 4வது நாளாக மீனவர்கள் கடலுக்கு செல்லாத காரணத்தினால் படகுகள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் 600 விசைப்படகுகள் மற்றும் 4 ஆயிரத்து 400 நாட்டு படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் உள்ள கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, கூத்தன்குழி, உவரி, கூடுதாழை உள்ளிட்ட 9 மீனவ கிராமங்களை சேர்ந்த சுமார் 8 ஆயிரம் நாட்டு படகு மீனவர்கள் இன்று 4வது நாளாக கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை. இதனால் சுமார் 1500க்கும் மேற்பட்ட நாட்டு படகுகள் கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# சட்டம், ஒழுங்கைக் காக்க இயலாத திமுக அரசால் பொதுமக்கள் பாதுகாப்பு கேள்விக்குறி: அண்ணாமலை



சென்னை, டிச.1

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள சேமலைகவுண்டம்பாளையத்தில், தாய், தந்தை, மகன் என ஒரே வீட்டில் மூன்று பேர் கொலை செய்யப்பட்டுள்ள செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன்.

கடந்த ஆண்டும் பல்லடம் பகுதியில், இதே போன்று வீட்டில் புகுந்து ஒரே குடும்பத்தில் நான்கு பேர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாதபடி காவல்துறையின் கைகள் கட்டப்பட்டு இருப்பதால், தமிழகத்தில், சிறிதும் பயமின்றி வீடு புகுந்து கொலை செய்யும் அளவுக்கு, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கிடக்கிறது. காவல்துறைக்குப் பொறுப்பான முதலமைச்சரோ, இது குறித்து எந்தக் கவலையும் இன்றி இருக்கிறார். மாநில அரசின் முழுமுதற் பணியான சட்டம் ஒழுங்கைக் காக்க இயலாத திமுக அரசால், பொதுமக்கள் பாதுகாப்பு கேள்விக்குறியதாக இருக்கிறது. எதிர்க்கட்சியினரையும், அரசை விமர்சிப்பவர்களையும் கைது செய்ய மட்டுமே காவல்துறையைப் பயன்படுத்தாமல், அவர்கள் பணியைச் சுதந்திரமாகச் செய்ய அனுமதித்து, பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அ.தி.மு.க. பொதுக்குழுவை சிறப்பாக நடத்த 7 குழுக்கள் அமைப்பு



சென்னை, டிச.1

அ.தி.மு.க. பொதுக்குழு வருகிற 15ந் தேதி நடைபெறும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

கட்சியின் விதிப்படி பொதுக்குழுவை கூட்ட 5 நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பு வெளியிட வேண்டும். அதை 18 நாட்களுக்கு முன்பே அறிவித்து விட்டார்.

ஏற்கனவே ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் பொதுக் குழுக்கள் எடப்பாடி பழனிசாமி, பன்னீர் செல்வம் ஆகியோரின் பலத்தைக்காட்டும் போட்டிக் கூட்டங்களாகவே இருந்தன.

மேலும் இரட்டைத் தலைமையாக இருந்ததை மாற்றி ஒற்றைத் தலைமையாக அறிவித்த பொதுக் குழுவுக்கு எதிராக உச்சநீதிமன்றம், தேர்தல் ஆணையம் வரை சென்றார் ஓ.பி.எஸ்..

ஆனாலும் எடப்பாடி பழனிசாமிக்கு சாதகமாகவே நீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணைய தீர்ப்புகள் அமைந்தன.

எனவே இந்த பொதுக் குழுவை விரிவான பொதுக் குழுவாக கூட்டுகிறார்.

அதன்படி இந்த பொதுக் குழுவுக்கு சிறப்பு அழைப்பாளர்களாக 2 ஆயிரம் பேர் அழைக்கப்படுகிறார்கள். பொதுக்குழு உறுப்பினர்கள் 3 ஆயிரம் பேரையும் சேர்த்து சுமார் 5 ஆயிரம் பேர் கூட்டத்தில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

எனவே முழு அளவில் நடைபெறும் இந்த பொதுக் குழு கூட்டத்தை சிறப்பாக நடத்த தீர்மானங்கள் தயாரிப்புக் குழு, வரவேற்புக்குழு, உணவு உபசரிப்புக் குழு உள்ளிட்ட 7 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அ.தி.மு.க.வில் கடந்த ஒரு மாதமாக கள ஆய்வுக் கூட்டங்கள் மாவட்ட வாரியாக நடைபெற்று வருகின்றன. இந்த கள ஆய்வுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள், மாவட்ட மறு சீரமைப்பு தொடர்பாக நிர்வாகிகளின் கருத்துகள் ஆகியவை தொகுக்கப்பட்டு அடுத்த வாரம் எடப்பாடி பழனிசாமியிடம் கள ஆய்வுக் குழுவினரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் அ.தி.மு.க.வில் மாவட்ட மறுசீரமைப்பு செய்யப்பட்டு மாவட்டச் செயலாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இளைஞர்கள் கூடுதல் எண்ணிக்கையில் மாவட்டச் செயலாளர்களாக நியமிக்கப்படுவார்கள். கூட்டணி பற்றி பேசுவதற்கான அதிகாரம் எடப்பாடி பழனிசாமிக்கு வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

# 2 பெண்கள் உட்பட 4 பேர் தீக்குளிக்க முயற்சி

நெல்லை, டிச.1

நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு இன்று 2 பெண்கள் உட்பட 4 பேர் மனு அளிப்பதற்காக வந்தனர். அவர்கள் கலெக்டர் அலுவலக நுழைவு வாயிலில் உள்ளே நுழைந்தவுடன் திடீரென மறைத்து வைத்திருந்த பாட்டிலை எடுத்து அதிலிருந்து மண்எண்ணையை தலையில் ஊற்றி தீக்குளிக்க முயற்சி செய்தனர்.

இதை அங்கு பாதுகாப்புக்கு நின்று கொண்டிருந்த போலீசார் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். உடனே அவர்கள் விரைந்து சென்று தீக்குளிக்க முயன்றவர்களிடம் இருந்து மண்எண்ணை பாட்டில் மற்றும் தீப்பெட்டியை பறித்து விட்டு அவர்கள் மீது தண்ணீரை ஊற்றினர். தொடர்ந்து அவர்களிடம் விசாரித்தனர். அதன் விபரம் வருமாறு:

நெல்லையை அடுத்த தாழையூத்து பகுதியை சேர்ந்தவர் நயினார் முகமது. இவர் தாழையூத்து பகுதியில் உள்ள ஒரு பழைய தியேட்டரை வாங்குவதற்காக ரூ. 45 லட்சத்திற்கு ஒப்பந்தம் போட்டுள்ளதாகவும், அந்த தியேட்டர் அருகே இருந்த இடத்தை வாங்கிய அரசியல் கட்சி பிரமுகர் ஒருவர், நயினார் முகமது ஒப்பந்தம் செய்திருந்த தியேட்டர் இடத்தையும் அபகரிக்க முயன்றதாக கூறப்படுகிறது.

இதையடுத்து நயினார் முகமது கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு கோர்ட்டில் நடைபெற்று வரும் நிலையில் தற்காலிகமாக அந்த இடத்திற்கு இரு தரப்பினரும் சொந்தம் கொண்டாட முடியாது என்றும், மேற்கொண்டு அந்த இடத்தில் பணிகள் எதுவும் நடத்தக் கூடாது எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று காலை ஒரு கும்பல் அந்த தியேட்டர் வளாகத்துக்கு சென்று பணிகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த நயினார் முகமது, தனது மகள் ஜன்னத், மருமகள் அலிமா பேகம் மற்றும் ஒரு உறவினருடன் நெல்லை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு வந்து இது தொடர்பாக புகார் மனு ஒன்று அளித்துள்ளார்.

பின்னர் கலெக்டர் அலுவலகத்தில் அவர் முறையிட வந்த நிலையில் தீக்குளித்து தற்கொலைக்கு முயற்சி செய்தது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து 4 பேரையும் போலீசார்பாளைபோலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.

# ஐயப்பன் பற்றி இசைவாணி பாடியதில் தவறு இல்லை: செல்வப்பெருந்தகை



சென்னை, டிச.1

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சத்தியமூர்த்தி பவனில் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:

மக்களை நம்பாமல் இயந்திரங்களை நம்பி தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. விஞ்ஞானத்தை பா.ஜ.க தவறான முறையில் பயன்படுத்துகிறது.

இந்த தேசம் அதானி, அம்பானிக்காக இருக்கிறதா? பா.ஜ.க அரசு பெரிய பெரிய தொழிலதிபர்களுக்கு கடன் தள்ளுபடி வழங்கி வருகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் முறையாக தேர்தல் நடத்தப்படவில்லை.

நாங்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு ஓட்டுப் பதிவு எந்திரத்தின் மீது நம்பிக்கை இல்லை. இனிவரும் காலங்களில் பா.ஜ.க. அரசு வாக்குச்சீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தமிழ் மொழி, திருக்குறள் பற்றி பேசும் பிரதமர் மோடி, தமிழ்நாட்டில் உத்திரமேரூர் கல்வெட்டில் உள்ள குடஓலை முறையை நடைமுறைபடுத்துவாரா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இசைவாணி 5 ஆண்டுகள் முன்பு ஐயப்பன் பாடல் ஒன்றை பாடி உள்ளார். அதில் எந்த தவறும் இல்லை. இது தொடர்பாக ஆர்.எஸ்.எஸ்.சை சேர்ந்தவர்கள் புகார் கொடுத்து வருகின்றனர்.

இசைவாணி தவறாக பாடி இருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

இசைவாணிக்கு கொலை மிரட்டல் விடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருக்கு தமிழக அரசு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

நடிகை கஸ்தூரி மீது நடவடிக்கை எடுத்ததற்கு காரணம் அவர் ஒரு மொழியையும், இனத்தையும் இழிவு படுத்தி பேசியிருந்தார். இசைவாணி பாடிய பாடல் மதத்தை இழிவுப்படுத்தும் வகையில் இல்லை. நானும் இந்து தான். நானும் ஐயப்பன் கோவிலுக்கு சென்று இருக்கிறேன். இந்தவிவகாரத்தை ஆர்.எஸ்.எஸ். வேண்டுமென்றே பெரிதுபடுத்தி வருகிறது.

தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல்நலம் முன்னேறி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சபரிமலை சீசனையொட்டி கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் மெட்டல் டிடெக்டர் சோதனை



கன்னியாகுமரி, டிச.1

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் பக்தர்களும் வந்து அம்மனை தரிசனம் செய்துவிட்டு செல்கிறார்கள்.

கடந்த 16ந்தேதி முதல் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் நடை திறப்பு நேரம் கூடுதலாக 1 மணி நேரம் நீட்டிக்கப்பட்டு உள்ளது. அதன்படி பகல் 1230 மணிக்கு அடைக்கப்படும் நடை 1 மணிக்கு அடைக்கப்படுகிறது. இரவு 8.30 மணிக்கு அடைக்கப்படும் நடை 9 மணிக்கு அடைக்கப்படுகிறது.

சபரிமலைசீசன்தொடங்கிய நாள் முதலே கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஐயப்ப பக்தர்களின் கூட்டம் நிரம்பி வழிகிறது. இந்த சீசனையொட்டி இன்றும் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்களின் கூட்டம் அலைமோதியது.

இதனால் பகவதி அம்மன் கோவில் வெளிபிரகாரத்தில் உள்ள கியூ செட்டில் பக்தர்களின் நீண்ட "கியூ" காணப்பட்டது. பக்தர்கள் சுமார் 1 மணி நேரம் "கியூ"வில் காத்திருந்து அம்மனை தரிசனம் செய்துவிட்டு சென்றனர். கோவிலுக்குள் தரிசனத்துக்கு செல்லும் பக்தர்கள் "சூட்கேஸ்", கைப்பை மற்றும் பெட்டிகள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மேலும் போலீசார் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் கடுமையான சோதனை செய்த பிறகே பக்தர்கள் கோவிலுக்குள் தரிசனத்துக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

தினகனி

1.12.2024

# தூத்துக்குடியில் மருத்துவமனைக்குள் நுழைந்து பெண் டாக்டர் மீது தாக்குதல் கணவர் கைது



தூத்துக்குடி, டிச.1

தூத்துக்குடி பாத்திமாநகர் 1வது தெருவை சேர்ந்தவர் டாக்டர் ரேவதி (வயது36). இவர் பிரையண்ட் நகரில் உள்ள தனியார் மருத்துவ மனையில் டாக்டராக பணி செய்து வருகிறார். இவர் டேனியல் என்பவரை காதலித்து திருமணம் முடித்துள்ளார்.

இந்நிலையில் இருவருக்கும் கருத்து வேறு வேறுபாடு காரணமாக ரேவதி தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறார. நேற்று இரவு மருத்துவமனையில் நுழைந்த டேனியல், ரேவதியை தன்னுடன் வருமாறு அழைத்துள்ளார் அதற்கு அவர் மறுக்கவே, அவரை தாக்கி காயப்படுத்தி உள்ளார். இதுகுறித்து டாக்டர் ரேவதி அளித்த புகாரின் பேரில் தென்பாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திருமுருகன்வழக்குப்பதிவு செய்து டேனியலை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# திருச்சி விமான நிலையத்தில் சார்ஜாவில் இருந்து கடத்தி வரப்பட்ட அரை கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல்

கே.கே. நகர், டிச.1

திருச்சி விமான நிலையத்திற்கு மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், துபாய், சார்ஜா, அபுதாபி உள்ளிட்டநாடுகளில் இருந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு இயக்கப்படும் விமானங்களில் அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று சார்ஜாவிலிருந்து திருச்சிக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் வந்தது. இந்த விமானத்தில் வந்த பயணிகளின் உடைமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது சந்தேகத்துக்கிடமான வகையில் இருந்த பயணி ஒருவரின் கைப்பையை சோதனை செய்தபோது அவரது கைப்பையில் கம்பி வடிவில் மறைத்து எடுத்து வந்த அரைகிலோதங்கத்தை பறிமுதல் செய்தனர். இதனை தொடர்ந்து அந்த பயணியை கைது செய்த சுங்கத்துறை அதிகாரிகள் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோல் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் தங்கம் கடத்தப்பட்டு வருவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்குதகவல் கிடைத்தது. இதனைதொடர்ந்துசுங்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனை மேற்கொண்டனர்.

மலேசியாவில் இருந்து திருச்சிக்கு வந்த தனியார் விமானத்தில் வந்த பயணி ஒருவரின் நடத்தையில் சந்தேகம் அடைந்த சுங்கத்துறை அதிகாரிகள் அவரை தனியே அழைத்து சென்று சோதனை செய்தனர். அப்போது, அவர் தனது உடமையில் மறைத்து எடுத்து வந்த குடிநீர் குழாயில் ரூபாய் 13.69 லட்சம் மதிப்பிலான 180 கிராம் தங்கத்தை எடுத்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து அவர் மீது வழக்கு பதிவு செய்த சுங்கத்துறை அதிகாரிகள் தொடர்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'புத்தகம் மட்டும்தான் தூக்கணும்' இடைநிற்றல் மாணவர்களிடம் கலெக்டர் அறிவுறுத்தல்



விருதுநகர், டிச.1

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 8ம் வகுப்பில் இடைநிற்றலான 5 மாணவ ர்களை கண்டறிந்து மீண்டும் அவர்களை பள்ளிக்கு அனுப்பும் முயற்சியில் அம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் ஈடுபட்டார். இது குறித்து அவர் மேற்கொண்ட கள ஆய்வில் இடைநிற்றலுக்கான காரணங்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரிடம் கேட்டு அறிந்தார். ஒரு மாணவனின் வீட்டிற்கு சென்ற கலெக்டர் மாணவனிடம் உன் அப்பா என்ன வேலை பார்க்கிறார். நீயும் லோடுமேன் வேலைக்கு தான் போகணும். லோடுமேன் வேலை எவ்வளவு கஷ்டம். இதெல்லாம் நீ தூக்கக்கூடாது. புக் மட்டும் தான் தூக்கணும். உதவி வேண்டுமானால் கேட்க வேண்டும் என தெரிவித்தார் அங்கிருந்த சிறுமியிடமும் தினமும் பள்ளிக்கு செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார் . சிறுமிக்கு உதவித்தொகை வருகிறதா என்றும் தாயாரிடம் கேட்டறிந்தார். கொரோனாவில் இறந்து போனவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை வருகிறதா? என்று கேட்டார். ரேஷன் கார்டு, ஆதார் கார்டு எதுவும் இல்லாததால் விட்டு விட்டதாக என்று சிறுவனின் தாய் கூறினார். என்னம்மா நீங்கள்... கொரோனாவில் இறந்தவர்களின் குழந்தைக்கு உதவித்தொகையை முதலமைச்சர் அறிவித்துள்ளாரே என்று கூறினார்.

இதைத்தொடர்ந்து சிறுவனின் தாயாரிடம் சிறுவனை கண்டிப்பாக தினமும் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்றும், சிறுவனிடம் பள்ளிக்கு வரவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

# குடிநீர்சொத்து வரி உயர்வை கண்டித்து திருப்பூரில் 3ந்தேதி உண்ணாவிரத போராட்டம்: இபிஎஸ் அறிவிப்பு

சென்னை, டிச.1

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

தி.மு.க. அரசு, ஆட்சிக்கு வந்த உடனேயே சொத்து வரி உயர்வு, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் கட்டணம் உயர்வு, குப்பை வரி விதித்தல் என்று பல்வேறு கட்டண உயர்வுகளை தமிழக மக்களின் தலையில் சுமத்தியதைக் கண்டித்து, அ.தி.மு.க.வின் சார்பில் தமிழகமெங்கும் பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப் பட்டன.

திருப்பூர் மாநகராட்சியின் ஜனநாயக விரோதப் போக்கை கண்டித்து, திருப்பூர் மாநகராட்சியின் அ.தி.மு.க. கவுன்சிலர்கள் வருகிற 3ந்தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை, திருப்பூர் மாநகராட்சி மாமன்ற கழக குழுத் தலைவர் அன்பகம் திருப்பதி அவர்கள் தலைமையில், கழகத்தைச் சேர்ந்த 17 மாமன்ற உறுப்பினர்களும்,

கழக நிர்வாகிகளும் கலந்து கொள்ளும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை, கழக தேர்தல் பிரிவுச் செயலாளரும், திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொள்ளாச்சி ஜெயராமன் தொடங்கி வைப்பார்.

கழக தலைமை நிலையச் செயலாளரும், கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வேலுமணி பழச்சாறு வழங்கி முடித்து வைப்பார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில், கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் பொது மக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# விளையாட்டு மைதானத்தில் ஜிம்னாஸ்டிக் பயிற்சி; மாணவியை நாய் கடித்ததால் பரபரப்பு

தருமபுரி, டிச.1

தருமபுரி மாவட்ட விளையாட்டு அரங்கம் தருமபுரி பிடமனேரி சாலையில் அமைந்துள்ளது. இந்த விளையாட்டு மைதானத்தில் கபடி, கைப்பந்து, கால்பந்து, தடகள விளையாட்டுகள், ஜிம்னாஸ்டிக் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளுக்கு பயிற்சி செய்வதற்கு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வந்து செல்கின்றனர். சிறுமியை நாய் கடித்தது

இந்த நிலையில் நேற்று சோலைக்கோட்டைசேர்ந்த 2ம் வகுப்பு படித்து வரும் அரசு பள்ளி மாணவி ஒருவர் ஜிம்னாஸ்டிக் பயிற்சிக்காக மாவட்ட விளையாட்டு மைதானத்துக்கு சென்ற போது அங்கு சுற்றி திரிந்த தெரு நாய் ஒன்று அந்த சிறுமியை கடித்தது. உடனே அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து பொது மக்கள் கூறிகையில், காலை முதல் மாலை வரை நுழை வாயில் திறந்து இருப்பதால், நகர பகுதியில் உள்ள தெருநாய்கள்விளையாட்டு மைதானத்திற்குள்நுழைந்து விடுகிறது. மேலும் 20க்கும் மேற்பட்ட தெரு நாய்கள் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றித் திரிந்து வருகிறது.

இதனால் விளையாட்டு மைதானத்தில் பயிற்சி செய்வதற்கு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை நாய்கள் கடித்து விடுமோ என்று அச்சம் நிலவி வருகிறது என்றனர்.

மேலும் இதுகுறித்து தருமபுரி மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் மாவட்ட நிர்வாகம் தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விரைவில் மீண்டும் பக்தர்களுக்கு ஆசி வழங்கும் தெய்வானை

திருச்செந்தூர், டிச.1

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த 18ந் தேதி கோவில் யானை தெய்வானை தாக்கி யானை பாகன் உதயகுமார் மற்றும் அவரது உறவினர் சிசுபாலன் ஆகிய 2 பேர் உயிரிழந்தனர். சம்பவம் நடந்த 10 நாட்களாக அறையில் யானையை கட்டி வைத்து மருத்துவர்களின் முழு கண்காணிப்பில் இருந்து வந்தது. இந்நிலையில் நேற்று 11வது நாள் யானையை அறையில் இருந்து வெளியே கொண்டு வந்தனர். இதற்காக யானையை அதிகாலையிலே குளிப்பாட்டி நவதானிய உணவுகள் வழங்கப் பட்டது.

யானை விரும்பி சாப்பிடும் பச்சை நாற்று வகை புல் உணவாக கொடுக்கப்பட்டது. அதை தெய்வானை யானை ருசித்து சாப்பிட்டது. முன்னதாக யானைக்காக கோவில் ஆனந்த விலாச மண்டபத்தில் சிறப்பு யாகசலை பூஜைகள் நடந்தது. யாக பூஜையில் வைக்கப்பட்ட கலத்தில் உள்ள புனிதநீர் கோவில் யானை தெய்வானை மீது தெளிக்கப் பட்டது.

மேலும் யானை கட்டப்பட்டிருந்த அறைக்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் புனிதநீர் தெளிக்கப்பட்டது.

தற்போது யானை சகஜ நிலையில் இருப்பதாகவும் விரைவில் பக்தர்களுக்கு ஆசி வழங்க வரும் என கூறப்படுகிறது.

# தேவிஸ்ரீ பிரசாத் பேசியதில் எந்த தவறும் இல்லை புஷ்பா 2 தயாரிப்பாளர்




தெலுங்கு திரை உலகில் முன்னணி நடிகராக இருந்துவருபவர் அல்லு அர்ஜுன். இவரது நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய அளவில் ஹிட் அடித்த படம் 'புஷ்பா தி ரைஸ்'. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகி வருகிறது. இப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா பாட்னாவில் நடைபெற்றது.

புஷ்பா 2' படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதில் தேவி ஸ்ரீ பிரசாத் பேசும்போது, "தயாரிப்பாளர்கள் கொடுக்கும் சம்பளமாக இருந்தாலும் சரி, ஒரு பணிக்கான பெயராக இருந்தாலும் சரி, அதை நாம் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் கோரவில்லை என்றால் யாரும் நமக்குத்தகுதியான நன்மதிப்பைக் கொடுக்க மாட்டார்கள். ரவி சார், நான் பாடலையோ பின்னணி இசையையோ சரியான நேரத்தில் வழங்கவில்லை என்று கூறி என்னைக் குறை கூறுகிறீர்கள். நீங்கள் என்னை விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் அன்பு இருக்கும் இடத்தில் புகார்களும் இருக்கும். இருப்பினும், அன்பை விட என் மீது உங்களுக்கு அதிக புகார்கள் இருப்பது போல் தெரிகிறது.

இப்போதும், 'தவறான நேரம், நீங்கள் தாமதமாக வந்தீர்கள்' என்று சொல்கிறீர்கள். நான் என்ன செய்வது? நான் 25 நிமிடங்களுக்கு முன்பு இங்கு வந்தேன், ஆனால் நீங்கள் உள்ளே வருவதை படமாக்க வேண்டும் என்று கூறி காக்க வைத்துவிட்டார்கள். அது எனது தவறில்லை." என்று தனது பேச்சில் குறிப்பிட்டார் தேவி ஸ்ரீ பிரசாத்.

'புஷ்பா 2'படத்தின் பின்னணி இசையை தேவிஸ்ரீ பிரசாத் அமைக்கவில்லை. இசையமைப்பாளர் சாம் சிஎஸ் மற்றும் தமன் பின்னணி இசை அமைத்துள்ளதாக தகவல் வெளியானது . மேலும் 'குட் பேட் அக்லி' படத்திலிருந்தும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் அவரை நீக்கியது. அந்தக் கோபத்தின் வெளிப்பாடுதான் அது என்று பலரும் பேசி வருகிறார்கள்.

இந்தப் பேச்சின் மூலம் மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் தேவி ஸ்ரீ பிரசாத் இருவருக்கும் பிரச்சினைகள் இருப்பதாக கூறப்பட்ட நிலையில், தயாரிப்பாளர் இதனை மறுத்துள்ளார்.

ஐதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'புஷ்பா 2' படத்தின் தயாரிப்பாளரிடம், "தேவிஸ்ரீ பிரசாத்துக்கும் உங்களுக்கும் இடையில் பிளவு ஏற்படுத்துள்ளதா?" என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த தயாரிப்பாளர் ரவிசங்கர், "அவர் சொன்னதில் எந்த தவறும் இல்லை. இதை அவர் சினிமாவில் வரும் ஒரு வசனத்தை போல பேசினார். நகைச்சுவையாகதான் கூறினார். நாங்கள் அனைவரும் குடும்பம்போல இணைந்து இருக்கிறோம். இசைத் துறையில் தேவிஸ்ரீ பிரசாத் இருக்கும் வரை, எங்கள் படங்களுக்கு அவர் இசையமைப்பார். அதேபோல நாங்கள் படங்களை தயாரிக்கும் வரை, அவருடன் இணைந்து பணியாற்றுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

# திருமண வீடியோ ஒளிபரப்பு உரிமையை விற்றதாக பரவிய தகவல் நாக சைதன்யா மறுப்பு



தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவின் மகனும், நடிகருமான நாக சைதன்யா, கடந்த 2017ம் ஆண்டு நடிகை சமந்தாவை திருமணம் செய்து, பின்னர் கடந்த 2021ம் ஆண்டு விவாகரத்து பெற்றார்.

அதன் பிறகு நடிகர் நாக சைதன்யா நடிகை சோபிதா துலிபாலாவை காதலிப்பதாக தகவல் பரவியநிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் 8ந் தேதி இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது. இது குறித்தான புகைப்படங்களை நடிகர் நாகார்ஜுனா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

இவர்களது திருமணம் அடுத்த மாதம் 4ம் தேதி ஐதராபாத்தில் நடைபெற இருப்பதாக கூறப்படும்நிலையில், திருமண வீடியோவை நெட்பிளிக்ஸ் தளத்தில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. மேலும், இந்தத் திருமண நிகழ்வை ஆவணப்பட பாணியில் காட்சிப்படுத்தும் உரிமையை நெட்பிளிக்ஸ் நிறுவனம் ரூ. 50 கோடிக்கு பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், நாக சைதன்யா அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'அது தவறான செய்தி, அப்படி எந்த ஒப்பந்தமும் இல்லை' என்றார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடிகை நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் ஆகியோரின் திருமண ஆவணப்படம் நெட்பிளிக்ஸில் ஒளிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: நார்த் ஈஸ்ட் அணியை வீழ்த்தி ஈஸ்ட் பெங்கால் வெற்றி



13 அணிகள் பங்கேற்றுள்ள 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர்பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் இன்று . இரவு 7.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணிகள் மோதின .

பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடியது. இதனால் ஆட்ட நேர முடிவில் 10 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணி வெற்றி பெற்றது. ஈஸ்ட் பெங்கால் அணியில் டிமிட்ரியோஸ் கோல் அடித்தார்.

# உலக செஸ் சாம்பியன்ஷிப்: குகேஷ் லிரென் மோதிய 4வது சுற்று ஆட்டம் டிரா



இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது. 14 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் முதல் சுற்றில் லிரெனும், 3வது சுற்றில் குகேசும் வெற்றி பெற்றனர். 2வது சுற்று 'டிரா' ஆனது.

இந்த நிலையில் நேற்று 4வது சுற்று நடந்தது. கருப்புநிற காய்களுடன் ஆடிய குகேஷ் முதல் நகர்வாக ராணி முன் உள்ள சிப்பாயை 2 கட்டம் எடுத்து வைத்தார். முந்தைய ரவுண்டில் நீண்ட நேரம் யோசித்து நேரத்தை இழந்ததால் தோல்வியை தழுவிய லிரென் இந்த முறை விழிப்போடு செயல்பட்டார்.

இருவரும் பரஸ்பரமாக காய்களை வெட்டுக் கொடுத்ததால் ஆட்டம் 'டிரா'வை நோக்கியே சென்றது. இறுதியில் 42வது நகர்த்தலில் 'டிரா' செய்ய ஒப்புக் கொண்டனர். அப்போது இருவரிடமும் ஒரே மாதிரி 5 காய்கள் எஞ்சியிருந்தன.

4 சுற்று முடிவில் இருவரும் தலா 2 புள்ளியுடன் சமநிலையில் உள்ளனர். இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடக்கும் 5வது சுற்றில் தமிழகத்தை சேர்ந்த குகேஷ் வெள்ளைநிற காய்களுடன் ஆடுகிறார்.

# புரோ கபடி லீக்; குஜராத் அணியை வீழ்த்தி புனேரி பால்டன் வெற்றி



11வது புரோ கபடி லீக் தொடர் கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடந்து முடிந்தன. இதையடுத்து தொடரின் 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று இரவு 9 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் ஜெயண்ட்ஸ் புனேரி பால்டன் அணிகள் மோதின .

இந்தஆட்டத்தில்தொடக்கம்முதல்இருஅணிகளும் சிறப்பாக விளையாடின . ஆனால் கடைசி கட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியபுனேஅணி 3433 என்றபுள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.